

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 84 – ஒலி: 32 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆவணி 26 – வியாழக்கிழமை 11 செப்டம்பர் 2025 – கோவை ★ ★ 16 + 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 32: Thiruvalluvar Year - 2056 - Aavani 26 - Thursday 11 September 2025 - Kovai ★ ★ 16+12 Pages ₹ 5.00


## செப். 20 அன்று கழக மாவட்ட வாரியாக

# ‘ஓரணியில் தமிழ்நாடு’ பொதுக்கூட்டங்கள்!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, செப். 11 -**

**செப்டம்பர் 15 - பேரறிஞர் அண்ணா பிறந்தநாளில் மண், மொழி, மானம் காக்க தமிழ்நாடெங்கும் 68 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குச்சாவடிகளில் நாம் நடத்தும் கூட்டங்களில் உறுதிமொழி எடுப்போம்! என்றும் செப்டம்பர் 20 ஆம் நாளன்று கழக மாவட்ட வாரியாக ‘ஓரணியில் தமிழ்நாடு’ பொதுக் கூட்டங்கள் நடத்தப்படும் என்றும் கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

கழக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நேற்று முன்தினம் (9.9.2025) காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்றது. அதில், கழகத் தலைவர் அவர்களும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-

கடந்த பத்தாண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில்,படுபாதாளத்துக்குப் போன தமிழ்நாட்டின் வளர்ச்சியை மீட்டெடுத்து, 11.19 விழுக்காட்டு வளர்ச்சியோடு, இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக நம் திராவிட மாடல் ஆட்சியில் உயர்த்தியிருக்கிறோம். இதன் அடுத்தக்கட்ட பாய்ச்சலுக்கு அடித்தளமிடுவதற்காக ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்குச் சென்றேன்.

இந்தப் பயணத்தை தொடங்குவதற்கு முன்,இது ‘ஹிட்’ அடிக்கும் என்று சொன்னேன். சொன்ன மாதிரியே, 15 ஆயிரத்து 516 கோடி ரூபாய்க்கான முதலீடுகளை ஈர்த்து ‘சூப்பர் ஹிட்’அடித்துள்ளது!

### என் பயணங்கள் ‘ஹிட்’ ஆக நீங்களும் காரணம்!

இந்த வெற்றிப் பயணத்தை நிறைவு செய்துவந்தபோது, நீங்கள் எல்லோரும் வழங்கிய வரவேற்புக்கு, இந்தத் தருணத்தில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய பயணங்கள் ஹிட் ஆவதற்குக் காரணம், நான் மட்டுமல்ல; எனக்குப் பக்கபலமாக இருக்கும் நீங்களும்தான் காரணம்! நீங்கள் இல்லாமல் நான் இல்லை; கோடிக்கணக்கான உடன்பிறப்புகளும் - தமிழ்நாட்டு மக்களும் இல்லாமல் நான் இல்லை!

தமிழ்நாட்டை ஒரு ட்ரில்லியன் பொருளாதாரமாக உயர்த்த வேண்டும் என்ற இலக்கை நாம் விரைந்து அடைய வேண்டும் என்றால் இந்தப் பயணங்களில் வெற்றியடைந்தால் மட்டும் போதாது.வரவிருக்கும் 2026 தேர்தலிலும் மாபெரும் வெற்றியைப் பெறவேண்டும்! இதற்கான அடித்தளமாகத்தான், “ஓரணியில் தமிழ்நாடு” முன்னெடுப்பைக் கடந்த ஜூலை மாதம் 3ஆம் நாள் தொடங்கினோம்.

சர்வாதிகார மனப்பான்மையோடு தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசுக்கு எதிராக,தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்க, தமிழ்நாட்டு மக்களை ஒன்றிணைக்க நீங்கள் எல்லோரும் களத்தில் சிறப்பாகப் பணியாற்றினீர்கள். மக்களின் நம்பிக்கையைப் பெறக் களத்தில் பணியாற்றிய அத்தனை நிர்வாகிகளிடமும், நான் பாராட்டினேன் என்று சொல்லுங்கள்! ஏனென்றால், நான் மகிழ்ச்சியோடுசொல்றேன்... ஒரு கோடிக்கும் அதிகமான குடும்பங்களை, ‘ஓரணியில் தமிழ்நாடு’ இயக்கத்தில் இணைத்துள்ளோம்.

உங்கள் எல்லாருக்கும் - ஏன், உங்கள் மூலமாக கழகத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் சொல்கிறேன்... தேர்தல் முடியும் வரைக்கும்“ஓய்வு” என்ற சொல்லையே மறந்துவிடுங்கள்! ஏனென்றால், 2026ல் நாம் பெறப்போகும் வெற்றி, திராவிட முன்னேற்றக் கழகத்துக்கான வெற்றி மட்டுமல்ல; ஒட்டு மொத்தத் தமிழ்நாட்டுக்கான வெற்றி!



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (9.9.2025) காணொலிக் காட்சி வாயிலாக தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கழக பொதுச் செயலாளர் – நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், கழக முதன்மைச் செயலாளர் – நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, கழக துணை பொதுச் செயலாளர்கள், தலைமைக்கழக நிர்வாகிகள் மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

ஒன்றிணைத்து, அவர்களின் துணையோடு தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்க நம்மால்தான் முடியும்! அதற்கான வலிமையை நாம் பெறப்போகும் நாள்தான், வரும் செப்டம்பர் 17. முப்பெரும் விழா!

அதற்கு முன், நம்மையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் பிறந்தநாளான செப்டம்பர் 15ஆம் நாள்,

> **நம்மையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் பிறந்தநாளான செப்டம்பர் 15ஆம் நாள், 68 ஆயிரம் வாக்குச்சாவடிகளிலும் அந்தந்த வாக்குச்சாவடிகளில் இணைந்த குடும்பங்களை அழைத்து, BLA, BDA, BLCகளின் கூட்டங்களை நடத்த வேண்டும். இது நிறைவு விழா கூட்டம் இல்லை; இதுதான் தொடக்கவிழா கூட்டம்!**

எப்படிப்பட்ட ஆபத்துகள் தமிழ்நாட்டைச் சூழ்ந்திருக்கிறதென்று சாதாரணமாக டீக்கடையில் பேப்பர் படிப்போர் கூட உணர்ந்திருக்கிறார்கள். ஃபேக் நியூஸ் டைவர்ஷன் பாலிட்டிக்ஸ் என்று மக்களைக் குழப்ப எதிர்க்கட்சிகள் என்ன வேண்டுமானாலும் செய்யட்டும்; அதுதான் அவர்களால் முடியும். மக்களை

68 ஆயிரம் வாக்குச்சாவடிகளிலும் அந்தந்த வாக்குச்சாவடிகளில் இணைந்த குடும்பங்களை அழைத்து, BLA, BDA, BLCகளின் கூட்டங்களை நடத்த வேண்டும். இது நிறைவு விழா கூட்டம் இல்லை; இதுதான் தொடக்க விழா கூட்டம்!

தமிழ்நாட்டின் நலனைப் பாதுகாக்கும் பாதுகாவலர்களாக ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் நம்மோடு இணைந்திருக்கும் எல்லோரையும் தேர்தல் வரைக்கும் நம்முடனே இணைத்துக்கொண்டு களப்பணியாற்ற வேண்டும். அதற்கான உறுதிமொழியை அந்தக் கூட்டங்களில் எல்லோரும் எடுக்க வேண்டும்.

முப்பெரும் விழாவில் - கழக உடன்பிறப்புகள் அனைவரையும் ஒருசேர ஒரே இடத்தில் பார்ப்பதற்காக ஆவலோடு காத்திருக்கிறேன். லட்சக்கணக்கான உடன்பிறப்புகள் கரூர் நோக்கி திரண்டு வருவார்கள். எல்லோரும் பாதுகாப்பாகவந்து போவதை உறுதிசெய்யுங்கள். அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தும் இருக்க வேண்டும். மேற்கு மண்டலத்தேர்தல் பொறுப்பாளரும் - மாவட்டக் கழகச் செயலாளருமான செந்தில் பாலாஜி அவர்கள், விழாவுக்கான ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்து வருகிறார். அத்தனை மாவட்டக் கழகச் செயலாளர்களும் செந்தில்பாலாஜி அவர்களுக்குத் துணையாக இருக்கவேண்டும்.

முப்பெரும் விழா முடிந்த பிறகு, செப்டம்பர் 20ஆம் நாள், ஓரணியில் தமிழ்நாடு கூட்டங்களை கழக மாவட்டங்கள் வாரியாக நடத்த வேண்டும்.

### 2026ம் ஆண்டுத் தேர்தலிலும் நாமே உதிப்போம்!

நமது அரசின் திட்டங்களால், மக்களிடையே நமக்கு இருக்கும் ஆதரவு உணர்வை அப்படியே தேர்தல் வரைக்கும் எடுத்துச் சென்று அறுவடை செய்ய ஒவ்வொருவரும் களத்தில் தீவிரமாகப்பணியாற்ற வேண்டும். அடுத்து நமது இலக்கு ஒன்றுதான், அது, 2026இல் திராவிட மாடல் 2.0 அமைய வேண்டும் என்பதே!

அதற்கு நான் உங்களிடம் கேட்பது ஒன்றே ஒன்றுதான், தேர்தல் நாள் வரைக்கும் பசி தூக்கம் ஓய்வை மறந்து, உழைப்பை கொடுங்கள்! ஓய்வறியாச் சூரியனாக உழைப்போம்! 2026 லும் நாமே உதிப்போம்!

இவ்வாறு கழகத் தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## ஒன்றிய அரசு எவ்வளவுதான் முட்டுக்கட்டைப் போட்டாலும் தமிழ்நாடு போராடும்; தமிழ்நாடு வெல்லும்!

# நாட்டிற்கே வழிகாட்டியாக உள்ளது ‘திராவிட மாடல்’ அரசு!

## ‘இந்தியா டுடே’ மாநாடு 2025 (தெற்கு) மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!


**சென்னை, செப். 11 -**

**ஒன்றிய அரசு எவ்வளவுதான் முட்டுக்கட்டைப் போட்டாலும் தமிழ்நாடு போராடும்; தமிழ்நாடு வெல்லும் என்றும், நாட்டிற்கே வழிகாட்டியாக ‘திராவிட மாடல்’ அரசு உள்ளது என்றும், ‘இந்தியா டுடே’ மாநாடு 2025 (தெற்கு) மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.9.2025) கோயம்புத்தூரில் நடைபெற்ற “இந்தியா டுடே மாநாடு 2025ல் (தெற்கு)” மாநாட்டில் காணொலி வாயிலாக கலந்து கொண்டு ஆற்றிய உரை வருமாறு :-

புகழ்பெற்ற இந்தியா டுடே குழுமம் கோவையில் நடத்துகின்ற இரண்டு நாள் கருத்தரங்கிற்கு வருகை தந்திருக்கக்கூடிய சிறப்புப் பேச்சாளர்கள், அன்பிற்குரிய விருந்தினர்கள், பார்வையாளர்கள் மற்றும் பத்திரிகைத் துறை அன்பர்கள் எல்லோருக்கும் என் அன்பான வணக்கம்!

இந்த கருத்தரங்கில் நேரடியாக கலந்துகொண்டு, தமிழ்நாட்டின் முன்னேற்றப் பயணம் குறித்து என்னுடைய கருத்துகளை உங்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று திட்டமிட்டிருந்தேன். ஆனால், ஐரோப்பிய பயணத்தை முடித்துவிட்டு, நேற்றுதான் சென்னைக்குத் திரும்பினேன். அதனால், என்னால் நேரில் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முடியவில்லை.




இருந்தாலும், காணொலி வாயிலாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி! இந்த வாய்ப்பை ஏற்படுத்தி தந்த இந்தியா டுடேவிற்கு என்னுடைய நன்றி!

### இந்தியாவின் வளர்ச்சி என்சின் தமிழ்நாடு!

தமிழ்நாடு இன்று இந்தியாவின் வளர்ச்சி எஞ்சினாக அனைத்து குறியீடுகளிலும் நம்பர்1 மாநிலமாக திகழ்கிறது. இதற்கு அடித்தளமாக திராவிட மாடல் ஆட்சியின் சமூகநீதி, சமத்துவம், கூட்டாட்சி மற்றும் அனைத்துத் தரப்பு மக்களையும் உள்ளடக்கிய வளர்ச்சி ஆகியவை அமைந்திருக்கிறது.

தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடிமகனும், குறிப்பாக, ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள், பெண்கள் என்று எல்லோரும் சமூக அளவில், கல்வியில், பொருளாதாரத்தில் மேம்பட வேண்டும்; சமமான வாய்ப்புகளை பெறவேண்டும் என்பதுதான் எங்களுடைய குறிக்கோள்.

சமத்துவம் என்பது சொற்களில் மட்டுமல்ல, செயல்பாட்டிலும் எதிரொலிக்கின்ற அளவுக்கு செயல்படுகிறோம். அதற்கு சமீபத்திய எடுத்துக் காட்டுதான், “காலனி” போன்ற ஒடுக்குமுறையின் அடையாளமாக மாறியிருக்கின்ற சொற்களை அகற்றி, அரசு விடுதிகளையும், சமூக நீதி விடுதிகளாக பெயர் மாற்றம் செய்து சாதிய அடையாளங்களை நீக்கி வருகிறோம்.

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்